# FOREVER LOVE.

பிடிப்பதற்கு காரணம் இருந்தும்,

பிடிக்காமல் போகிறது சிலரை.

வெறுப்பதற்கு காரணம் இருந்தும்,

வெறுக்க முடியவில்லை சிலரை.

காதலின் அன்பை ,

சொல்லிப் புரிய,

வைக்க முடியாது.

உன்னால் மட்டுமே -- அதை

உணரமுடியும்.



உன்னுள் - நான்

என்னுள் - நீ

இதை - நாம்

இருவரும் அறிவோம்.

அன்பு அதிகரிப்பதும் இல்லை

அருகில் இருப்பதினால்.

அன்பு குறைவதும் இல்லை

தொலைவில் இருப்பதினால்.

அக்கறையாய்

ஒரிரு வார்த்தை ........

அதனால் எனக்கு - நீ

பக்குவ நிலையை

***கற்றுக் கொடுக்கிறாய்.***

என் அன்பே !!! - காதலுக்கு

திகதி,நேரம்,நாள்

என்று ஏதும் இல்லை.



என் வாழ் நாள் பூராவும்

நேற்று, இன்று, நாளை

எப்போதும் நாம் இருவரும்

பிரிவில்லா அன்புடன்.

**காதலுக்கு ஓர் தினம்**

**வேண்டுமா?**

ஒற்றைப்

***பூவிலோ,காகிதத்திலோ, வாழ்த்து மடலிலோ***

எம் காதலை கூறி விட முடியுமா?

காதல் என்பது முடிவில்லாத

பயணம்.

**LOVE FOREVER.** **Feb 14 2017@Toronto. Jeyan**